
# தமிழ்த்திரை

ஆசிரியர்: ஆ. நடராசன்

[illegible]ஆசிரியர்: எம். ஜி. சாமி



விலை

25 காசு

## மூன்றும் ஆண்டுமலர்



சென்னை
சாந்தி
டிலக்ஸ் ஏர்கண்டிஷண்ட்
கிரௌன்
புவனேசுவரி
மற்றும்
தென்னுடெங்கும்
பத்மஸ்ரீ
சிவாஜி
கணேசன்
அளிக்கும்
ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
திருவருட்செல்வர்
ஈஸ்ட்மென் கலர்
பாடல்கள்·கவிஞர் கண்ணதாசன்·இசை K.V. மகாதேவன்
ஒளிப்பதிவு·பிரசாத்·கலை·கங்கா
ரிகார்டிங்·ரீரிகார்டிங்·T.S.ரங்கசாமி
ஸ்டுடியோ·சாரதா (லெஸ்ஸிஸ் ஆப் மெஜஸ்டிக் ஸ்டுடியோ)
பராஸஸிங்·பிரிண்டிங்·ஜெமினி ஸ்டுடியோஸ் கலர் லாபரட்டரி
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A.P.நாகராஜன்


SEMBI

சி. என். அண்ணாதுரை

முதலமைச்சர்

கோட்டை,

சென்னை—9.



"தமிழ்த்திரை" பத்திரிக்கை தனது மூன்றாம் ஆண்டு விழாவினையொட்டி மலர் வெளியிட இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி. மலர் சிறந்த முறையில் வெளி வரவும் ஆண்டுவிழா இனிது நடைபெறவும் என் வாழ்த்துக்கள்.

சி. என். அண்ணாதுரை. M. A.

(ஒப்பம்)

Phone: 82358

# SUNDARA

## PAINT PRODUCTS

MFS., PAINTS & DRY COLOUR
OIL, ETC,
No 69, Guruvappa Chetty St.,
Chintadripet - Madras-2.

*With best compliments:*

# J. GOVINDARAJ

AUTOMOBILE SPECIALIST

No. 1/A, New Bangalow Street,
Chintadripet, Mount Road,
MADRAS-2.

# ARTISTS T.K.M. & SONS

THE PRESIDENCY EXPERTS, MADRAS.

(Proprietor:- T. K. Muniswami Mudaliar)

**54, Guruvappa Chetty Street, Chintadripet.**

RENOWNED ARTISTS
of the Madras Presidency
UNDERTAKE
Up-to-date and Western Style Portraits, Oil
Paintings of all kinds in all sizes

High Style Bromide Enlargements in Black and White,
Sepia, Oil and Water Colour

SPECIAL CONCESSION
very moderate rates for unveiling Portraits of
National Leaders, Patriots and Prominent Citizens,
for schools, public places and offices

Finishing is assured to the level of Western Style
and up-to-date model, Moderate rates will be
charged. Rejected originals from
foreign can be done here.

மு. கருணாநிதி
பொதுப்பணி அமைச்சர்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை—9.



அன்புடையீர்!

தமிழ்த் திரையுலகம் அடைந்துள்ள முன்னேற்றத்தில், திரை ஏடுகளுக்குப் பெரும் பங்கு உண்டு. திரைக் கதைகள் அவற்றின் பின்னணி, அவற்றில் பங்கு பெறும் கலைஞர்கள் பற்றி மக்களிடையே ஆர்வத்தை எழுப்பவும். திறனாய்வுக் கண்ணோட்டத்தை வளர்க்கவும், அவை உதவுகின்றன. சிறந்த நோக்கத்துடனும், திரையுலக முன்னேற்றத்தில் உண்மையான பற்றுடனும் நடத்தப்படும் ஏட்டால் சமூகமே ஏற்றம் பெறும்.

மூன்றாவது ஆண்டு மலர் வெளியிடும் "தமிழ்த்திரை" இவ்வழியில் தொடர்ந்து வெற்றி நடை பயிலும் என்று நம்புகிறேன். மலர் வன்னமும் வனப்பும் மிக்கதாக வெளிவர எனது நல்வாழ்த்துக்கள்.

அன்புள்ள,

மு. கருணாநிதி
(ஒப்பம்)

அழகிய அச்சுக்கலைக்குச் சிறந்த இடம்

# "செஞ்சுடர் அச்சகம்"

கண்கவர் அச்சு வேலைகளுக்குச் சிறந்த இடம்!
குறைந்த செலவில் நிறைந்த அளவில்,
எல்லாவித அச்சு வேலைகளும்,
குறித்த காலத்தில் செய்து தரப்படும்,
நவீன எழுத்து வடிவங்கள் நாகரீக டிசைன்கள்,
பெருந்தலைவர்களின் பிளாக்குகள் எம்மிடம்,
நிறைந்த அளவில் உண்டு.
வருகை தரும் இடம்:

நிர்வாகி: S. R. கண்ணன்.
செஞ்சுடர் அச்சகம்.
ஜலால்புரு சின்னக் கடைவீதி.
சேலம்,

PHONE: 35515

With the best compliments,
from

**Kumaran Traders.**

(HUMAN HAIR EXPORTERS)

★

No.59, Kutti Maistry Street,

MADRAS-1.

*Prop. M. P. BALASUBRAMANIAM*



சி. பா. ஆதித்தனர்

எம்.ஏ., பார்-அட்-லா.

சபாநாயகர், (தமிழ்நாடு சட்டசபை.)

செயின்ட் ஜார்ஜ் கோட்டை

சென்னை-9.



அன்புடையீர்!

"தமிழ்த்திரை"யின் மூன்றாவது ஆண்டு மலர் வெளியாக இருப்பது கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். திரை உலகிற்கு "தமிழ்த்திரை" செய்து வரும் தொண்டு தொடர்ந்து நடைபெற வாழ்த்துகிறேன்.

தங்கள் அன்புள்ள,

சி. பா. ஆதித்தனர்,

(ஒப்பம்)

★ சிறந்த சிற்றுண்டி !

★ சுவையான சாப்பாடு !!

★ அன்பான உபசரிப்பு !!!


அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற சிறந்த இடம்: —

## உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணபவன்

### காபி, சாப்பாடு ஹோட்டல்

62, குருவப்பச்செட்டி வீதி,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை- 2.

எல்லோரும் விரும்புவது




விற்பனையாளர்கள் தேவை

Cables-
Swan Baby

Phone 36687

## The Dhanalakshmi Trading Co.,

Manufacturers of:
Sewing, Embroidery Knitting &
Packing Thread Etc.

No. 40. Seven Wells St., Madras-1.

**எம். ஜி. ராமச்சந்திரன்,**
எம். எல். ஏ.

எம். ஜி. ஆர். தோட்டம்
இராமாவரம், சென்னை



அன்புடையீர்,

கலை உலகமும், பத்திரிகைகளும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டது. இரண்டும் உயிரும், உடலும் போன்றது. அந்த துறைக்காக பாடுபட்டு வரும் "தமிழ்த்திரை" மூன்றும் ஆண்டு மலர் வெளி வருவது கண்டு மிகவும் மகிழ்கிறேன். மேலும் மேலும் கலை உலகுக்கும், பொது நன்மைக்கும் பாடுபட வேண்டும் என வாழ்த்துகிறேன்.

அன்பன்,

**எம். ஜி. ராமச்சந்திரன்**

(ஒப்பம்)




ஏஜெண்டுகள் தேவை!

அதிக விளைச்சல் கொடுக்கக்கூடிய

பெர்டிலைசர்களுக்கு

★ சல்பேட்

★ மிக்சர்

★ சூப்பர்

முன் பணம் கட்டி எடுத்து விற்பனை செய்ய
ஏஜெண்டுகள் தேவை.

———o———

விபரங்களுக்கு எழுதவும்.

ஜெனரல் கமர்ஷியல் கார்பரேஷன்,

44/2, மௌபரீஸ் ரோடு,

ஆள்வார்பேட்டை, சென்னை-2.

Tel: TABLESALT — Phone: Office: 752, Resi: 221

# T. Manickam & Co.

White Salt Powder Gypsum Merchants

* No. 1, White Nice
* Medium Rough
* White Crushed Salt,
* Gypsum and Dry Salt
* Powder available.

146, PALAYAMCOTTAI ROAD
TUTICORIN-3

"Treatment specialised in mental and paralysis cases. Treatment extended to all other ailments too."



## DR. M.A. KAREEM, Ex. M C.

Regd. Medical Practitioner

A. S. M PHARMACY & HOME

No 110, Dr. Natesan Road, Madras-5

PHONE: 85008

சிவாஜிகணேசன்

Phone: Office 84126
Res: 88761
"ANNAI ILLAM"
BOAG ROAD, MADRAS-17.



அன்புடையீர்,

தங்களது "தமிழ்த்திரை" மூன்றும் ஆண்டுமலர் வெளிவர இருப்பதை அறிய மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

உயரிய கலைவளர்ச்சியால், தங்களது தொண்டு நேர்மையும், செழுமையும் பெற்று, "தமிழ்த்திரை" ஓர் எடுத்துக்காட்டு இதழாய் வளர்ந்து வளம்பெற வேண்டுமென இறையை வேண்டுகிறேன்.

அன்பன்

**வி. சி. கணேசன்,**
(ஒப்பம்)


மோகன் புரொடக்ஷன்ஸ்
ராஜா வீட்டுப் பிள்ளை
டைரக்ஷன்
தாதாமிராஸி
தயாரிப்பு
P.L.மோகன்ராம்
இன்று முதல்
ஸ்டார்
மஹாராஜா
சீனிவாசா
மற்றும்
தென்னகமெங்கும்

என். வி. நடராசன் M.L.C.,
அமைப்புச் செயலாளர். தி.மு.க

சென்னை-11.
12—7—67

'தமிழ்த்திரை' மூன்றாம் ஆண்டு மலர் மணக்கப்போவது அறிந்து மகிழ்ச்சி.

தனிப் பெருந்தலைவர் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் இயங்கி வரும் மக்களாட்சி இனிதே நடைபெறவும். ஏழை நடுத்தர மக்களின் வாழ்வில் நிரந்தரமான ஒளி வீசவும் 'தமிழ்த்திரை' தனது பணியினைத் தொடர்ந்து நடத்தி, அதில் வெற்றியும் பெற வேண்டுமென்று இதய பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

அன்பன்
என். வி. நடராசன்,
(ஒப்பம்)

---

A.V.P. Asaithambi, M.L.A.

Phone: 85410
"THANIARASU"
5. Village Road, Nungambakkam,
Madras-34. 8—7—67.

தமிழ்த்திரை மாதம் இருமுறை இதழ் கண்டேன். திரைப்படத்துறைக்கு நற்பணி ஆற்ற இது போல் பல ஏடுகள் தேவை. ஆசிரியர் திரு. நடராசன் முயற்சி வெல்க.

அன்பன்
ஆசைத்தம்பி.
(ஒப்பம்)

# தமிழ்த்திரை

★ (திங்கள் இருமுறை) ★


| தமிழ் 3 | திருவள்ளுவராண்டு 1998<br>பிலவங்க ஆடித்திங்கள் (1-8-67) | திரை 4-5 |
|---|---|---|


## வாழ்த்துங்கள்

மூன்ரும் ஆண்டு இன்று தமிழ்த் திரைக்கு இரண்டாண்டு முடிவுற்று நடந்து கொண்டு வருகிறது. இதற்குக் காரணம் தாங்கள் அனைவரும் அன்பு செலுத்தி ஆதரித்து வந்தமைமேயாகும். இந்த மூன்ரும் வயதை அடைந்த குழந்தையை இது காறும் காத்து வந்தது போல இனிமேலும் காத்து வளர்ச்சியடையச் செய்வீர்கள் என்பதில் ஐயமில்லை.

இந்த " தமிழ்த்திரை " மூன்ரும் ஆண்டு மலருக்கு நம்மதிப்பிற்குறிய முதலமைசர் அண்ணு, பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணுநிதி, சட்ட அவைத் தலைவர் ஆதித்தனுர் அவர்கள் மற்றும் நடிகர்கள் மக்கள் திலகம் எம். ஜி. ஆர். நடிகர் திலகம் பத்மஸ்ரீ. சிவாஜி கணேசன், நாகேஷ், திரு. N. V நடராசன் M. L. C. திரு. ஆசைத்தம்பி M. L. A. சாவித்திரி கணேஷ், ஜாவர் சீதாராமன், மற்றும் கட்டுரைகள், வாழ்த்துக்கள் வழங்கிய அனைவருக்கும் பொறுப்பாசிரியர் M. G. சாமி அவர்களுக்கும், அச்சகத்தார், விற்பனையாளர்கள், வாசக நண்பர்கள், விளம்பரம் அளித்த அனைவருக்கும் 'தமிழ்த்திரை' சார்பாக நன்றி தெரிவித்து மேலும் தமிழ்த் திரை வளர்ச்சிவுற, வளம்பெற வாழ்த்தியருளக்கேட்கிறேரும்.

—ஆசிரியர்.



நாவலரும், கலைக்காவலரும்.

**மகப்பேறு** தஞ்சை திருமலை சைக்கிள் கம்பெனி உரிமையாளர் துணைவி ராமு அம்மையாருக்கு 18—7—67 செவ்வாய் மாலை 3-30 மணி அளவில் பெண் குழந்தை பிறந்தது குறித்து தமிழ்த்திரை சார்பாக குழந்தையை வாழ்த்துகிறேரும். குழந்தையின் சார்பாக தமிழ்த்திரை வளர்ச்சிக்காக ரூபாய் 5-00 அன்பளிப்பாக மகிழ்வுடன் பெற்றுக் கொண்டோம்.

கே. நாகேஷ். 10—7—67

45-ஏ. செயின்ட் மேரிஸ்ரோடு, சென்னை-18

பிறந்து வளர்ந்து மூன்றாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் "தமிழ்த்திரை" திரையுலகில்—மேலும் சிறப்புமிக்க சேவைகளைச் செய்துவர வேண்டுமென்று மனமாற வாழ்த்துகிறென்.

அன்பன்

நாகேஷ்,


With the b st compliments from:



Rathakrishna Fine Arts

No. 7, Sivapprakasham Street,
Mount Road, Madras-2.

Cable: LEOBABY Phone: 32994

S. MOHAN & CO.,

IMPORT & EXPORT

Manufacturers, Representative

Prop: P.M.S. MANI

Indian Human Hair Exporter

2/3, Patnool Sandusa Street

PERIAMET. MADRAS-2.


## அட்டைப்பட விளக்கம்.

"தமிழ்த்திரை" யுலகில் மக்களுக்கு, நகைச்சுவை மூலம் நல்ல கருத்துக்களை வழங்கியும், தனக்கென்றில்லாது மற்றவர்க்கு வாரி வழங்கிய திரு. கலைவாணர், என். எஸ். கிருட்டினன் அத்தகைய உத்தமனை நினை படுத்தும் வகையில் முகப்பை அன்னாரது திருவுருவம் தாங்கி வெளிவருவது கண்டு மகிழ்கிறோம்.

# நடிகையர் திலகமும் - நமது ஆசிரியரும்!



காலை நேரம்:— நடிகையர் திலகம் எளிய உடை அலங்காரத்துடன் தோற்றமளிக்கிறார். ஹாலில் போடப்பட்டுள்ள சோபாவில் அமர்ந்திருக்கிறார். அந்த சமயம் நமது ஆசிரியர் தனது வினாவை எழுப்புகிறார். திருமதி சாவித்திரி அவர்களும் புன்முறுவலுடன் பதில் கூறுகிறார்.

கேள்வி: தற்போதைய தமிழ்ப் படங்களின் நிலை என்ன?

பதில்: தற்போது சிலத் தமிழ்ப் படங்கள் தரக்குறைவாகவே இருக்கிறது. குறிப்பாக தற்போது வெளிவரும் படங்களில் எல்லாம் ஆபாச உடை அணிந்து வரும் காட்சிகள் நிறைய இடம் பெறுகின்றன. இதற்குக் காரணம் மேலை நாட்டுப் படங்களை காப்பியடிக்க விரும்புவதுதான். வசூலுக்காக என்று கூட சொல்லலாம்.

கேள்வி: தாங்கள் தற்போது எத்தனைப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

பதில்: தற்போது ஆறு படங்களில் — அதாவது தமிழ், தெலுங்கு, இந்திப் படங்களில் நடித்து வருகிறேன்

கேள்வி: திரு. ஜெமினி கணேஷ் அவர்களைப் பற்றி தங்கள் அபிப்பிராயம் எப்படி?

பதில்: அவர் யாருடைய மனமும் புண்படும்படி நடக்காதவர். எல்லோருடனும் சரளமாகப் பழகும் தன்மை உடையவர். அதிக விளம்பரம் விரும்பாதவர். படத்துறையை பொழுது போக்காகக் கருதுபவர்.

கேள்வி: தமிழ்த் திரையின் ரசிகர் பெருமக்களுக்கு தாங்கள் கூறுவது?

பதில்: பொழுது போக்குக்காகப் படங்களைப் பார்ப்பது தமிழ்த்திரை ரசிகர்கள் தற்போது வரும் ஆபாசப் படங்களுக்கு அதிக ஆதரவுத் தரக்கூடாது. அப்படிப்பட்ட படங்கள் தேவையா என்பதை தமிழ்த்திரை ரசிகர்கள் உணர வேண்டும்.

கேள்வி: கலைத்துறையில் ஈடுபடும் நடிகர்களுக்கு குடும்பத்தில் உள்ள பங்கு என்ன?

பதில்: கலைத்துறைக்கும் வீட்டுக்கும் சம்மந்தம் உண்டு. கலைத்துறையில் ஈடுபடும் போது கலைஞர்களாகவும் குடும்பத்தில் ஈடுபடும்போது சாதாரணக் குடும்பப்பெண்களாகவும் மாற வேண்டும் என்பதே என் அபிப்பிராயம்.

கேள்வி: நாடகக் கலைக்கு தாங்கள் கூறும் ஆலோசனை என்ன?

பதில்: முன் காலத்தில் நாடகக் கலையை ஆட்சி செய்து வந்தவர்களே ஆதரித்து வந்தார்கள். பிறகு, அது படிப் படியாக ஆதரவை இழந்து தற்போது

பழைய நிலைக்குப் புத்துயிருடன் வளர்ந்து வருகிறது. மேலும் நாடகக் கலைக்கு எல்லோரும் ஆதரவு அளிக்க வேண்டும்'

கேள்வி: திரு எம். ஜி. ஆர் அவர்களைப் பற்றியும், திரு சிவாஜி கணேசன் அவர்களைப் பற்றியும் கலைத்துறை சம்மந்தமாக உங்கள் கருத்துகளைக் கூற முடியுமா?

பதில்; திரு எம். ஜி. ஆர் மக்கள் திலகம், திரு சிவாஜி கணேசன் நடிகர் திலகம் இருவரும் கலைத்துறைக்கு முக்கியமானவர்கள்.

கேள்வி: கலைஞர்களுக்கு அரசியல் அவசியமா?

பதில்: கலைஞர்களுக்கு அரசியல் தேவைதான்! ஆனால் அதில் நீந்தக்கூடாது

கேள்வி: தங்களுக்கு எந்தமொழி மிகவும் பிடித்தது?

பதில்: இரண்டு மொழி. ஒன்று காதலித்த மொழி. மற்றொன்று தாய் மொழி.

கேள்வி: தமிழ்த்திரை பத்திரிக்கைப் பற்றி தாங்கள் தங்கள் கருத்தை தெரிவிப்பீர்களா? மூன்றும் ஆண்டு மலருக்கு தாங்கள் கூறுவது?

பதில்: நல்லதொரு சினிமா பத்திரிக்கையாக விளங்குகிறது. பட விமர்சனம் நல்லதொரு முறையில் குறைபாடுகளை எடுத்துகூறுகிறது. தமிழ்த்திரை மூன்றும் ஆண்டு மலருக்கு என்னுடைய வாழ்த்தும் நன்றியும் கூறிக்கொள்ளகிறேன்.

கேள்வி: கலைத்துறையில் தற்போது தங்கள் நிலை என்ன?

பதில்: ரசிகர்கள் விரும்பும் வரை கலைத்துறையில் நீடித்துப் பணியாற்ற விரும்புகிறேன்.

கேள்வி: தாங்கள் இயக்குநராகப் பணியாற்றும் படம் எப்போது வெளிவரும்?

பதில்: விரைவில் வெளிவரும் என நம்புகிறேன் அந்தப் படத்தில் இசைப் பொறுப்பு, தயாரிப்பு முற்றிலும் பெண்களே பங்கு பெருகின்றார்கள்.

---

# நடிகையர் திலகத்திற்கு

## பாராட்டு விழா!

சென்ற 17-7-67ல் சென்னை, மயிலை பைன் ஆர்ட்ஸ் கிளப்பில் சீனிவாசா காந்தி நிலையத்தாரால் நடிகையர் திலகம், திருமதி. சாவித்திரி கணேசன் 150வது படநிறைவு விழா நடைபெற்றது. விழாவிற்கு தலைமை வகித்து கல்வி அமைச்சர், இரா நெடுஞ்செழியன் அவர்களும், விழாவில் பங்குகொண்டு திருவாளர்கள் ஏ.எல். சீனுவாசன், T. K. சண்முகம், A. P. நாகராசன், ஜெயசங்கர், சந்திரகாந்தா மற்றும் பலர் பாராட்டிப் பேசினர். பட அதிபர்களும், நடிகர்களும் மற்றவர்களும் வாழ்த்துரை வழங்கியும் அன்பளிப்பும் மலர்மாலைகளும் வழங்கி விழாவை சிறப்புறுத்தினர். விழாவில் பிலிம்நியூஸ் ஆனந்தன் அவர்களால் சாவித்திரி கணேஷ் நடித்த 150 படங்களில் உள்ள புகைப்படங்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைத்திருந்தது விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் கவர்ந்தன.

NON-POISONOUS No. 3689 A. I. R. Regd. 126951

45 வகை மூலிகைகளாலும் 9 வகை பச்சிலைகளாலும் ஆயுர்வேத முறைப்படி தயாரித்தது. கண்வலி, காது வலி, காதில் சீழ்வடிதல், கண் சிவப்பு, சொரி, சிரங்கு, வயிற்றுவலி, வயிற்றில் புண், தேமல், வண்டுகடி, தேள்கடி, கரப்பான், வெட்டுக்காயங்கள் மற்றும் எல்லா ரணவியாதிகளையும் குணபடுத்தும். இதில் கெந்தகம், துத்தம் முதலிய பாஷண வஸ்துக்கள் கிடையாது. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை யாதொரு பயமும் இன்றி உபயோகிக்கலாம்.

# வாளவாடி V. K. V. ஆயில்ஸ்

**போலி மருந்துகள் வந்துவிட்டன -- ஜாக்கிரதை !**
**இன்றே வாங்கி உபயோகியுங்கள்**
**முதல் எழுத்து V-ம் கடைசி எழுத்து V-ம்**
**பார்த்து கவனித்து வாங்குங்கள்.**

★

## வாளவாடி V. K. V. ஆயில் கம்பெனி


காந்தி நகர், போன்: 465

உடுமலைப்பேட்டை, P. O. கோயம்புத்தூர், Dt.

சென்னை விற்பனையாளர்:

**சூபர் கெமிகல்ஸ் கம்பெனி**

**1-A/2, எல்டாம்ஸ் ரோடு, சென்னை-18.**



# நகைச் ★ ★ சுவை!

(ஜாவர் சீதாராமன், M.A., B.L.)

நகைச் சுவை என்பது மனிதனின் பிரத்தியோகமான குணவிசேஷம். சிரிப்பு என்ற வரப்பிரசாதம் மனிதனுக்கு இல்லா விட்டால் அவன் வாழ்வு தாங்க முடியாத பயங்கர அனுபவமாக இருக்கும். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விஷயத்தைப் பார்த்து சிரிக்கிறான். மனிதனுக்கு மனிதன், நகைச் சுவை மாறுபடுகிறது. தமிழ் நாட்டின் சரித்திரத்தில் பெருவாரியாக லட்சக்கணக்கான ஏழைகளுக்கு சிரிக்கக் கற்றுக் கொடுத்தவர் காலஞ் சென்ற கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் தான். பாமரர்களை படம் பார்க்கும் போதே அவர் சிரிக்க வைத்தார். சிறிது படித்தவர்களைக் கூட அவர் சிந்திக்க வைத்தார். வாழ்வின் கோணல்களை சிரிப்போடு எடுத்துக் காட்டி சீர்திருத்த முயன்றார். கலைவாணர் ஏழைகளுக்கு பணம் கொடுத்த போது ஏழைகள் உள்ளம் மகிழ்ந்தது. ஆனால் அம் மகிழ்ச்சி உதடு வரை வந்து வெளிப்பட்டது. அவர் நடிப்பைப் பார்க்கும் போது தான். நடிக்காது வீட்டில் இருந்த போது தானம் கொடுத்தார். நடித்த போது சிரிப்பை தானமாக மக்களுக்கு அளித்தார்.

நகைச் சுவைக்கும் தரமுண்டு. பண்டிதன் சிரிக்கும் கட்டத்தில் பாமரன் சிரிப்பதில்லை. வாழைப் பழத்தோலில் ஒருவன் வழுக்கி விழுதல், மாவு டப்பா தலையில் கொட்டும் போது ஒருவன் வெண் பவுடர் உருவமாக மாறுதல், முழு ஆடை அணிந்து தண்ணீரில் தள்ளப்படுதல், பெரும் தொந்தியோடு தத்தி தத்தி நகருதல் இவைக் கீழ்த்தரமான நகைச் சுவையாகக் கருதப்படுகிறது. (ஸ்லாப்ஸ்டிக்) என்கிறான். சார்லி சாப்ளின் நடிக்கும் படங்களில் கீழ்த்தரமான நகைச் சுவை, நடுத்தரமான நகைச் சுவை, உயர்தர நகைச் சுவை எல்லாம் கலந்து கிடைக்கின்றன. சிந்திக்க வைக்கும் நகைச் சுவை, கண்ணீரோடு கலந்த நகைச் சுவையே, உத்தமமான நகைச் சுவையாகக் கொள்கின்றனர். ஒரு நாடகம், சினிமா பூராவிலும் உத்தமமான நகைச் சுவையில்இருக்க முடியாது. அப்படி இருந்தால் வசூலாகாது. மக்களின் பலதரத்தாருக்குத் தக்கபடி அமைய வேண்டும். இந்தியாவின் மற்ற இந்தி, தெலுங்குப் பகுதிகளைவிட, தமிழ் நாட்டு நகைச்சுவை நடிகர்கள் திறமையில் உயர்வானவர்கள் என்பதில் ஐயமில்லை. கலைவாணர் காலந்தொட்டு தங்கவேலு, சந்திரபாபு, இன்று சிறப்பா இயங்கி வரும் நாகேஷ் வரையில் நகைச்சுவைப் பொறுத்தவரையில் நம் நாட்டுக்கு நிகர் இங்கிலாந்து, அமெரிக்காவைத்தான் சொல்லலாம். இது நாம் பெருமைப்பட வேண்டிய விஷயம்.

# "இளமைப் பருவம்"



— இரா. முத்துராமன்

இளமைப் பருவம்—ஆம் இவை ஒவ்வொருவர வாழ்விலும் வந்து போகிறது. வாழ்க்கையின் ஒரு பகுதியே இளமைப் பருவம். அது எப்பொழுதும் நிலைத்து நிற்பதில்லை. இயற்கை அளிக்கும் எத்தனையோ வரப் பிரசாதங்களில் இளமைப் பருவமும் ஒன்று.

இளமை என்பது பொதுச்சொல். பருவம் என்பது காலத்தைக் குறிக்கும் சொல். இந்த குறிபபிடட காலத்தில் (இளமையில்)எத்தனை எத்தனையோ எணணஙகளை, ஒவ்வொருவரும் தன்னுடைய இதயத்தில் செலுத்தி, வருங் காலததை, கற்பனைக் கண் கொண்டு பார்த்து எண்ணி யெணணி மகிழ்கிறோம். அந்த எணணமே பிறகு செயலாக உருவெடுக்கிறது. இளவயதில் மருத்துவராகவோ, கலைஞராகவோ அரசியல் வாதியாகவோ நாம் ஆக வேண்டும் என்று நினைப்பாரேயாகில் அதுவ்வவரது மனதில் பதிந்து முயற்சிக்கு வழிகோலி வெற்றியையும் தேடித் தருகிறது. அது போலவே நாம் ஒரு வீரனாக வேண்டும். கொள்ளைத் தலைவன் ஆக வேண்டும் என்று நினைப்பானாகில் அவன் போக்கும் அவ்வழியே செல்லுகறது.

ஒரு சிலர் இளவயதில் ஒன்றை நினைத்து முதுமையில் அவர்கள் வேறு திசையில் செல்லுகின்றதற்குக் காரணம்?— அவர்களுடைய சுற்றுப்புற சூழ் நிலைகளே! ஒருவன் இளம வயதில் நடிகராக வேண்டும் என்று நினைத்து மேடையேறி விட்டால் அந்த நிகழ்ச்சியை அவன் மடியும் வரை மறக்கவே முடியாது. இதை நோக்குங்கால் "இளமையில் கல்" பருவத்தே பயிர் செய்" என்ற பழமொழி நினைவிற்கு வருகிறது.

மேலே கூறியவையை சீர் தூக்கிப் பார்த்தால் இதிலிருந்து ஒரு உண்மை வெளியாகிறது. இளம் பருவத்தில் நல்லவையோ, தீயவையோ பதியுமானால் அது அவன் நெஞ்சத்தை விட்டு அகலவே அகலாது. ஆகவே தமிழ்த்திரை உலகு இளம் பருவத்தினர் காணும் படங்கள் அவர்களுடைய எதிர் காலததை நிர்ணயிக்கும் வகையில் வெளியிட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். காம உணர்வுகளையும்,மேனாட்டுத் தீய சூழ்நிலைகளை எடுத்துக் காட்டும் வகையிலும, கொலை, கொள்ளை முதலியவைகளையும, அதிகமாக எடுத்து விளக்கும் வகையிலும், படங்கள் வெளிவந்தால், இளம் பருவததினர்கள் நெஞ்சங்களில் ஊறி, அதுவே அவர்களுடைய வாழ்வைப் பறிக்கும என்பதில சந்தேகமில்லை. படஅதிபர்கள் நான் எனது கருத்துக்களை கூறுகையில் தவறாகக் கொள்ளாமல் பெரும்பாலும் மேற்படிக கருத்தை மையமாக வைத்துப் படம் எடுத்து வெளியிட்டால், எதிர்கால சந்ததியினருக்கும், நாட்டுக்கும் நன்மை பயக்கும் என்பதற்காகவே எனது தாழ்மையான எண்ணத்தை வெளியிடுகிறேன்.

சிலருக்கு வேண்டாதவற்றை ஆசிரியரும் குடும்பத் தலைவர்களும் பயிலக கூறுகின்றனரே என்று, இளம் வயதினர் கருதி வருந்து

இன்றனர். ஆனால் அது அவர்களுடைய வாழ்க்கைக்கும் பயன்படும் போதுதான், அதன் பெருமையை உணர முடியும். ஒருவன் தனது சிறுவயதில் அவனுக்குத் தேவையில்லாத வாய்ப்பாடுகளை மனப்பாடம் செய்யக் கூறுகின்றனரே என்று வருந்துகிறான் பிறகு முதுமையாகி வாணிபம் செய்யும் காலத்தில் அவன் சிரமமின்றி கணிதம் செய்கையில் அதன் சிறப்பை அறிகின்றான். இப்படி "இளமையில் வளையாதது—முதுமையில் வளையுமா?" என்ற பழமொழிப்படி இளமையில் கற்றால்தான் அதன் பலனை முதுமையில் அனுபவிக்க முடியும். முதுமையில் கற்றால் அது அவனுக்கும் பயனில்லாது மற்றவர்க்கும் பயனில்லாது விழலுக்கிறைத்த நீர்போல ஆகிவிடும்.

அந்த வகையிலே வெகு நாட்களுக்கு முன்பு இருந்தே கலைத்துறையில் இருவரும் (ஆசிரியரும், நானும்) ஒன்றாகவே இருந்தது முதற் கொண்டு தற்போது உள்ளவரை நெருங்கிய நண்பராக இருந்துவரும், தமிழ்த்திரை ஆசிரியர் ஆ. நடராசன் அவர்கள் இளம் பருவத்தில் இருக்கும் போதே கலையிலும், மருத்துவத் துறையிலும், பொதுத் தொண்டிலும், அதிக ஈடுபாடுகொள்ளத் துடித்தவர்.

நாங்கள் இருவரும் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு "மதுரை கலைமணி நாடக சபா"வில் நடிகர்களாக இருந்தோம். அப்போது அவருடைய அயராத கலை ஆர்வத்தையும், கடமையே கண்ணாக இருந்ததையும் கண்டு அவரை "ஜாவர்' என்று நகைச்சுவையாக அழைப்பதும் உண்டு. அத்தகைய நண்பர் "தமிழ்த்திரை" உலகுக்கு தொண்டாற்ற "தமிழ்த்திரை" என்ற பெயர் கொண்ட செய்தித்தாளுக்கு ஆசிரியராகவும் உரிமையாளராகவும் இருந்து கலைப்பணி செய்து தற்போது மூன்றாம் ஆண்டு மலர் வெளியிடுகிறார் என்றால் நான் பெருமைப்படுவதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. "தமிழ்த்திரை' தற்போது திங்கள் இருமுறையாக வெளிவருவதை இனி வாரம் ஒருமுறையாகவும், பின் தினக் கலையேடாகவும் வெளி வந்து கலைப் பணியாற்ற எனது மனமார்ந்த நல் வாழ்த்துக்களைக் கூறி "தமிழ்த்திரை"க்கு வாசகர்கள், ரசிகர்கள் அனைவரும் பேராதரவு தந்து ஊக்குவிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்—வாழ்க ரசிகர்கள்—வளர்க தமிழ்த்திரை.

அன்பன்

—இரா. முத்துராமன்,

(ஒப்பம)

# "பொற்காலம்"

(பழனிகோபு, பி. ஏ.)

கலை என்றால் என்ன? கலை — அது ஆன்மாவின் பசி! அந்தப் பசியை உருவாக்குவது எது? உணர்ச்சி! அந்தப் பசியைப் போக்குவது? அந்த உணர்ச்சிகளின் ஒருமித்த எழுச்சிக்கு அமைக்கப்படும் உருவமே அதன் பசிக்கு உணவாகிறது அந்த எழுச்சியின் விளைவே சிற்பம், சித்திரம், காவியம், சிறுகதை போன்ற இன்னப்பிற உருவங்கள். இன்று மக்களின் கலைப்பசிக்கு உணவு அளிப்பதில் முக்கிய இடம் பெறுவது திரைப்படமாக இருக்கின்றது. நாடகங்களும் அந்த பணியைக் குறுகிய எல்லையில் செய்து வருகின்றன. ஆனால் முக்கிய இடம் பெறும் திரைப்படம் மக்களின் கலைப்பசிக்குச் சரியான உணவு படைக்கின்றதா என்பதே இன்று எழுந்துள்ளள் கேள்வி! படைக்கின்றது; ஆனால் போதுமான அளவு அல்ல! ஓரளவு! மக்களின் கலாரசனைகளைத் திருப்தி செய்கின்றோம் என்று சொல்லிக் கொண்டு ரசாபாசக் காட்சிகளைப் புகுத்தி மக்களின் கருத்தைச் சிதறிவிடச் செய்கின்ற திரைப் படங்களே இன்று மிகுதியாக வெளிவருகின்றன. எனவே தான் ஓரளவு என்று கூற வேண்டியிருக்கின்றது. இந்த ஓரளவர்வது உள்ளதிற்கு நியாயமான, நேர்மையான முறையில் உவகையூட்டுகின்ற படங்கள் வருகிறதென்றால் அது கலைத்துறைக்கு சில நல்ல உள்ளங்களின் வரவால் ஏற்பட்ட விளைவாகும். காசைக் குறிகோளாகக் கொள்ளாது, மக்கள் பண்பின் தரத்தில் நம்பிக்கை கொண்டு, இலட்சியப் படங்கள் தயாரிக்கும் சில உயர்ந்த கலைஞர்கள் இருப்பதால் தான் தமிழ்த்திரையுலகம் தானும் கலைக்குத் தொண்டு செய்கிறேன் என்று சற்றுப் பெருமிதத்துடன் கூறிக் கொள்ள முடிகிறது.

உள்ளத்தை மாசுபடுத்தாத உணர்வே கலையின் முக்கிய அம்சமாகும். அந்த முக்கிய அம்சத்திற்கு முதன்மை தருவதாலேயே கலை வாழவும் வாழ்ந்து உயரவும் வழியிருக்கின்றது. இதனை உணர்ந்து திரைப்படங்கள் தயாரிக்கப்படுமானால் அவை மக்களின் மனதிற்கு மகிழ்வைத் தருவதோடல்லாது அவர்களிடம் நற்பண்புகளை வளர்ப்பதாகவும் அமையும். இத்தகைய சிறப்புக்கள் பெற்றுத் தமிழ்ப்படங்கள் வருமானால் தமிழின் பெருமை; தமிழன் பண்பாடு இவை உலக அரங்கில் நிலை நிறுத்தும் பொற்காலம் பிறந்து விட்டது என்றுதான் கூறவேண்டும். அந்தப் பொற்காலம் பிறக்குமா? தமிழ்த்திரைக் கலைஞர்கள்தான் பதில் கூற வேண்டும்.

# திசை திருப்புங்கள்!

(தூத்துக்குடி மகராசன்):

சினிமாவால் நன்மைகள் பல இருந்த போதிலும் ஒரு சில தீமைகளால் நன்மைகள் மலிந்து போகிறது. மனம் வருந்தி படம் பார்க்கச் செல்வோர்கள் நிம்மதியேதும் காணமுடியாமல் சலிப்புடனேயே திரும்புகின்றனர். அதற்கு அடிப்படைக் காரணம் கதை யமைப்பின் தவறேயாகும்.

சிறந்த கதைவசனம் என்று விளம்பரத்தில் காணப்படுகிறதே தவிர அதற்கேற்ப விமர்சனங்ள் ஏதும் காணப்படுவதில்லை. பழய தமிழ்ப் படங்களைக் காட்டிலும் தற்போது வரும் தமிழ்ப் படங்கள் தரக்குறைவாக இருக்கின்றன. 100 நாட்கள் ஓடினால் போதும் என்ற தயாரிப்பாளர்கள் நினைக்கின்றனர். ஆனால் சிறப்புகளைப்பற்றிக் கவலை கொள்வதில்லை. சமூக படமாக இருப்பின் சண்டைக் காட்சிகளும், ஆங்கில நடன பாணிகளும், அரை நிர்வாண உடைகளையும் புகுத்தி வாலிப உள்ளங்களுக்கு விருந்தளிக்க வேண்டுமென்றெண்ணு வதனாலேயே தமிழ்த்திரையுலகம் சீர்கெட்டு விட்டன. இந்த இருபதாம் நூற்ருண்டுக்கு நாகரீகம் அவசியம் தான். அதுவும் ஓரளவு இருக்க வேண்டும் அதுவே தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒத்ததாகி அமையவேண்டும். அதைவிடுத்து ஆபாசங்களைப் புகுத்தி தமிழ் மக்கள் இதயத்தில் அறியாமையைப் புகுத்தி அழிவுப் பாதைக்கே வழிகாட்டும் வகையில் பச்சைக்கொடி காட்டுகிருர்கள். இப்படிப் பட்ட பல ஆபாச உணர்வுகளை இளைஞர்கள் உள்ளத்திலும் பரவலாகக் காட்டத் துணிந்து விட்டிருக்கிருர்கள் பட அதிபர்கள். அதனால் அவர்களுக்கு வருவாய் அதிகம் இருப்பது உண்மைதான். அதே நேரத்தில் கெட்டழியும் பெண்கள் கூட்டங்கள் எத்தனை? கேடு விளைவிக்கும் இளைஞர்கள் வரிசை எத்தனை?

திரைப்படங்களால் சமூகம் வாழ வேண்டும் சமூகம் வாழ்ந்தால்தான் நாடு முன்னேற வழி வகை உண்டு. நாடு முன்னேற்ற மடைந்தால்தான் உலக நாடுகளின் கண்ணோட்டத்தில் நம்நாடு முன்னோடியாக இருக்க ஏதுவாகும். அதை விடுத்து வருவாயே குறிக்கோளாக இருப்பார்களேயானால் நிச்சயம் இன்னமும் கொஞ்சகாலத்தில் தமிழ்த் திரையுலகம் இல்லாமலேயேப் போய்விடும். கதை. அமைப்பில் வலுவும், வசனத்தில் ஆழ்ந்த கருத்தும், பயிர்ச்சியில் திறமையும் இல்லாது படத்திற்கு உயிரோட்டம் தரும் வகையில் தற்போதைய பட அதிபர்கள் ஒரு சிலரைத் தவிர நவீன முறையைக் கையாளத் துவங்கி விட்டனர். படத்தின் சிறப்புகளை வரிசைப்படுத்தி தருவோருக்கு பரிசு என்ற ஆசையைக் காட்டி தரக் குறைவான படத்திற்குக்கூட வசூலை அதிகரிக்க ஆயுதமாக்கிக் கொள்கின்றனர். அதையே அவர்கள் வெற்றி கண்டு விடுவதாக நினைக்கிருர்கள். இது நிச்சயம் வெற்றி அளிக்க முடியாது, முடிவில் தோல்வியே அடைவார்கள்.

திறமைக்கேற்ற நடிகர்களைத் தேர்வு கொள்வதில்லை. கோஷ்டிக் கேற்றவாறே நடிகர்களின் தேர்வு நடைபெறுகின்றன. சிறப்பு அம்சங்களைப்பற்றி கவலைப்படுவதில்லை. சில்லரை சேர்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர்.

யார் சிறந்த நடிகர்? என்று ஆராய்ச்சி செய்வதைக் காட்டிலும். இப்போதைக்கு யார் கை எந்த நடிகரின் கை ஓங்கி நிற்கிறதோ அந்தபக்கமே ஒரு சிலர் படத் தயாரிப்பாளர்கள் படையெடுக்கத் துவங்கிவிடுகின்றனர்.

இதனுல் நடிப்பில் சிறப்பைப்பற்றி சொல்வதற்கில்லாமல் போய் விடுகின்றன. இதனையெல்லாம் மாற்ற. மாற்றியமைக்க முதலில் ரசிகர்கள் தயாராகவேண்டும், ரசிகர்கள் மனதில் சமத்துவப் பக்குவம் வளரவேண்டும். உயர்ந்தவன், தாழ்ந்தவன் என் கட்சி நடிகர், உன் கட்சி நடிகர் என்ற பாகுபாடின்றியமையவேண்டும்.

திறமைக்கு முதலிடம் அளிக்க வேண்டும், அப்போதுதான் சிறப்புக்கும் பெருமை கிடைக்கும். அப்போதுதான் நடிப்பின் சிறப்பைப் பற்றி உணர முடியும். பாத்திரத்திற்கேற்ப நடிர்ககள் தேர்வு நடைபெறுமானுல்-அது வெற்றிக்குப் படிக்காட்டாக அமையக்கூடும். இனியாவது பட அதிபர்கள் மனம் திறந்து இந்த நல்ல பணியில் ஈடுபடவேண்டும் என வேண்டுகிறேன். ரசிகர்களும் அமைதியுடன் படம் பார்க்கவழி கிட்டும். கவலையைப்போக்க படம் பார்க்க வருவோர்க்கு நிம்மதி கிடைக்கும். புத்தம் புதிய கருத்துக்களால் மக்களுக்கு புத்துணர்ச்சி ஏற்படும். எனவே பட அதிபர்கள் சிந்தனைக்குரிய படம் எடுத்து திரையிட வேண்டும். அதன் சிறப்புக்களை மிகைப் படுத்தி விளம்பரப்படுத்த வேண்டும் அப்போதுதான் திரையுலகம் நல்லுலகமாக மாறமுடியும். அறியா மக்களுக்கு "திரை" அறிவுச்சுடராக விளங்க வழி காட்டுங்கள்.

திசைத் திருப்புங்கள்!

---

# குமாரி அனுராதா



சென்னை "ராஜா அண்ணுமலை" மன்றத்தில் K. அனுராதாவின் பரதநாட்டிய அரங்கேற்றம், "பொன்னியின் செல்வி" புகழ் குமாரி சந்திரகாந்தா அவர்கள் முன்னிலையில் சிறப்பாக நடைப்பெற்றது. இவருடைய நடன ஆசிரியர் திரு A. G. ஜானகிராமின் திறமை நாட்டியத்தில் பிரதிபலித்தது. இவருடைய தந்தை திரு. R. கேசவய்யா அவர்கள் பாரி கம்பெனியில் பணியாற்றி வருகிருர்.

---

# மேடைகளிலே!

## "நினைவின் நிழல்"

அரவிந் ரிக்ரியேஷன்ஸ்சாரின் "நினைவின் நிழல்" என்ற நாடகம் 23—7—67ல் மயிலை பைன் ஆர்ட்ஸ் கலையரங்கில் நடை பெற்றது. நாடகத்தில் நடித்த ராகவாச்சாரி மிகவும் சிறப்புடன் நடித்தார். குமாரி கவிதா மற்றும் பலர் கொடுத்த பாத்திரத்தை சிறப்படன் செய்தனர். இந்நாடகத்திற்கு ஏ. எல். சீனிவாசன் தலைமை வகித்துப் பாராட்டிப் பேசினுர்.

## "பயங்கர விஞடி"

முல்லைக்கலையரங்கம் மாதாந்திர விழாவில் "பயங்கர விஞடி" என்ற நாடகம் 26—7—67ல் எழும்பூர் மியூசியம் கலையரங்கில் நடைபெற்றது. இந்நாடகத்தில் ஆ. ஜ. நாதன், எம். ராஜேந்திரன், புஷ்பராணி — மூவரும் கதைக்கு உயிரூட்டும் வகையில் சிறப்பாக நடித்தனர். முல்லைக்கலையரங்க பொருளாளர் திடீர் கன்னையா பாராட்டுக்குரியவர்.



# உணர்வூட்டும் கலைவளர !

(வி. சுப்ரமண்யன், B.A., LL-B.)

இப்போதெல்லாம் கலைகளுக்கு ஒருகாலம் இன்றை நிலையை கலைகளைப் பொறுத்த வரை மறுமலர்ச்சி என்று கூறலாம். மக்களின் வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வுக்கு இடமில்லாமல் கலைகளின் செல்வாக்கு இடம் பெற்று வருகிறது. மக்களின் கருத்துககளையும் பழக்க வழக்கங்களையும் கூட வகுத்துக்கொடுக்கும் அளவுக்கு கலைகள் நம்மிடையே செழித்து வளர்ந்து வருகின்றன. இசை, நாட்டியம்; நாடகம்; இவற்றுக்கு வர்க்கபேதமின்று ஆதரவு பெருகிறது.

கடந்த நூற்றூண்டில் இத்தகைய மறுமலர்ச்சிக்கு வித்திடப்பட்டதேதவிர மறுமலர்ச்சிச்கு 'ஆக்கமும் ஊக்ககமும் இல்லை. அன்று நிலவிய அந்நிய ஆட்சியில் கெடுபிடிகளே அதிசம். இருந்தும் அந்நிய ஆட்சியை புறக்கணிக்கவும் எதிர்த்து போரிடவும் இந்தகலைகளையே தலைவர்கள் பெரிதும் நம்பினுர்கள் பிரச்சாரத்துக்கு கலைகளை விட சிறந்த சாதனங்கள் இல்லை என்பதுதான் காரணம். மேடையில் பேசிமக்களை புரிய வைக்கமுடியாநிலையில் ஒரு சிறந்த அம்சமான கலைகள் தாம் தலைவர்களின் தேசிய பிரச்சாரத்துக்கும் சமுதாய சிர்திருந்த் பிரசாரத்துக்கும் பெரிதும் உதவின. ஒவ்வொரு மேடையிலும் பிரதி'லிக்க வேண்டிய உணர்ச்சிகளை பட்டி தொட்டிகளிலும் பிரதிபலிக்கச் செய்ய 'சினிமா' எந்த "நிழலாட்டம்" பெரிதும் பயன்பட்டது. இந்ததுறையில் நுணுக்கத்திற்கு கதிப்புக் கொடுத்த கலைஞர்கள் இதை வெறும "நிழலாட்டமா" அல்லது பொழுது போக்காகவோ மட்டும் இருந்து விடாமல இதை "உணர் வூட்டும்" கலையாக பாணமித்து விட்டார்கள் இன்றைய சினிமா கேந்திர சாதனமாக அமைவதற்கு இந்த நூற்றூண்டின் ஆரம்பகாலத்தில்:இந்தத் துறையில் ஈடுபட்ட இயக்குனர்களே (டைரக்டர்கள்) காரணம்.

நாடு சுதந்திரம் பெறுமுன் திரைகளில் சுதந்திர உணர்ச்சிகளைத் தூண்டி விடும் கதைகள், கதைகளுக் கேற்ற கனல் தெறிக்கும் வசனங்கள், பாட்டுகள், உணர்வைத் தூண்டும் காட்சி நிலைகள் தோன்றின. புராணப்படங்களே வெளிவந்த காலம் மாறி சமூகப் படங்கள் ஏராளமாக வெளிவந்தன. நாட்டில் வர்க்கபேதம், மதபேதம், ஜாதி பேதம் என்னும் பல ஏற்றத் தாழ்வுகள் மறைவதற்கும மக்களிடையே ஒருமைப்பாடு உணர்வு தோன்றவும் இவை பெரிதும் உதவின. சரித்திரக் கதைகளும் படமாக்கப்பட்டு நமது கலாசார மேம்பாட்டுக்கு உதாரணமாக விளங்கின.

ஆனுல் இன்று நிலை மாறி வருகிறது. சமூகப் படங்களே இப்போது பெருகி வந்தாலும கதைகளில் எவ்வித பிடிப்பும் இல்லை. காதல் — களியாட்டம் — மேனுட்டு நாகரீகம் — ஆடை அலங்கோலம் இவற்றுக்குத் தான் இன்றைய சினிமாவில் முக்கியத்துவம் கொடுதது படங்கள் வெளிவருகின்றன. அறிவையும் உணர்வையும் தூண்டக் கூடிய சாதனம் இன்று அலங்கோல உணர்வுகளைத் தூண்டும் சாதனமாக மாறி வருகிறது. ஒரே மாதிரி கதைகள், காதல் போட்டிகள், அரை நிர்வாணக் காட்சிகள், கவர்ச்சி நடனங்கள் உயிரில்லாத இசை மெட்டுக்கள் இப்படியாகத் திரையுலகம் பொழுது போக்குச் சாதனமாக மாறி வருவதை யாரும் மறுக்க முடியாது. இந்த வேகத்தில படங்கள் வெளிவந்தால் மக்களே சலித்துப் போய் திரையுலகை வெறுக்கும் நிலை தோன்றலாம். அல்லாமல் இந்த போக்குக்கு மக்களின் ஆதரவு

கிடைக்குமானால் நமது நாட்டில் மேனாட்டு உடையும். நடையும், தான்பரவும். நமது பண்பாடு — நமது கலாசாரம் என்பதெல்லாம் புராண காலக் கொள்கையாகவும் மாறிவிடும்.

கலைகள் மக்களை வாழ்விப்பவை. மக்களை உருவாக்கும் சக்தி வாய்ந்தவை. மக்களின் உணர்ச்சிகளுக்கு உத்வேகம் கொடுக்கும் சக்தி பெற்றவை. கலைகள் மூலம் சமூகத்துக்கு எவ்வித நன்மைகள் செய்ய முடியுமோ அவ்வளவுகக்கு தீமைகளும் செய்ய முடியும். கீழ்த்தரமான காட்சிகள் படங்களில் மலிந்தால் மக்களின் மனதில் இதே உணர்ச்சிகள் படிந்து விடமுடியும். திரைப்படங்களைப் பெரும் பாலும் இளவயதினர் கண்டு களிக்கிறார்கள். இவர்களில் கருத்துக்களில் கீழ்த்தர மான ரசனை உணர்ச்சி தோன்றுவது உயர்ந்த கருத்துக்கள் பரவுதற்கு இடையூறாக இருக்கும். படப்பிடிப்பில் சிறுதவறு நேர்ந்தாலும் படப்பிடிப்பு தடை பெறுவது போல சமூக முன்னேற்றத்தில் இவ்வித தடைகள் தோன்றும். வளரும் சமுதாயத்தை மகிழ்விக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் இதை உணர்ந்தால எவ்வளவோ பெருத்த மாறுதல்கள் தோன்றலாம். திரையுலகில் தோன்றும் இத்தகைய உணர்ச்சிகளுக்கு இப்போது நாடகமேடைகளில் மாறுதல் காண முடிகிறது. வாழ்க்கையைப் பிரதிபலித்துக்காட்டும நாடகங்கள் பலவும் இப்போது வெளி வருகின்றன. திரையுலகத்துக்கு நாடக மேடைகளே ஜீவநாடி. நாடக மேடைகளில் தோன்றும் புரட்சிகள் திரையுலகிலும் புரட்சிகளைத் தோற்றுவிக்கும. நடிப்புக்கலை ஒரு வாழ்க்கைத் துறை மட்டுமல்ல. இதுமக்களை வாழ்விக்கவைக்கும் உணர்வூட்டும் கலையாகும். இந்தக்கலையை வளர்ப்பது சமூகத்தின் முக்கிய கடமை. இந்தக் கலையை வளர்க்க உதவுவது இந்தத் துறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் கடமையாகும்.

---


*Service is our motto!*

# R. TEX

## (Ex. Bangalore Emporium)

TAILOR IN GENTS SPECIALIST

73, Swaminaicken Street,
Chintadripet, Madras-2.

**வருகை தருக !**

எங்களிடம், கும்பகோணம், திருப்பூர், திருநெல்வேலி, காளாஸ்த்திரி முதலிய எல்லா ஊர் பாத்திரங்களும், விலை குறைவாகவும், நவநாகரீகத்திற்கு ஏற்றவகையிலும் கிடைக்கும்.

வருகை தரும் இடம்

உரிமையாளர்:-

**அ. கந்தசாமி செட்டியார்,**
கருணாமூர்த்தி பாத்திரக்கடை,
தட்டாரத் தெரு,
அரியலூர் (திருச்சி மாவட்டம்)

# "அனுபவி ராஜா அனுபவி" ——————விமர்சனம்.

அதிகம் செல்லம் கொடுத்து வளர்க்கப்பட்ட குழந்தைகள் எப்படி இருப்பார்கள் என்பதையும் விளையாட்டு வினையாவது இவைகளையும் மையமாக வைத்து வரையப் பட்டது தான் கதை.

கதைக்கு நகைச்சுவை, இரட்டை வேடம். தூத்துக்குடி நடைமுறைத் தமிழ். நீதிமன்றத்தின் திறமைமிக்க வக்கீல் வாதங்கள். விளையாட்டு வினையாவதற்கு பக்க துணையாக சூழ்நிலைகள், தங்கமுத்து இறப்பதை சஸ்பென்ஸ்க்காகக் காட்டி, மாணிக்கம் என்ற பாத்திரத்தை உருவாக்கி பிறகு தங்கமுத்துவை உயிரோடு கொண்டு வந்து ஒரு திருப்பத்தை உண்டு பண்ணுவது போன்றவைகளுக்கு, மற்றவைக்கும் கதாசிரியரின் திறமை வெளிப்படுகிறது. இதற்கு கதை அமைத்த இராம. அரங்கண்ணல் (சட்டமன்ற உறுப்பினர்) அவர்கள் பாராட்டுக் குறியவர்.

பாடல்கள்: "முத்துக் குளிக்க வாரிகளா?", "மெட்ரூஸ் நல்ல மெட்ரூஸ்" இரண்டு பாடல்களும் கருத்தாழம் கொண்டவைகளாக அமைத்து, முன்பிருந்ததை விட ஒருபடி உயர்ந்திருக்கிறார் கவிஞர் கண்ணதாசன்.

இசையை 'முத்துக்குளிக்க வாரீ, களா" என்ற பாட்டு கிராம இசையை ஒத்திருந்து ஒரு புது திருப்பத்தை உண்டு பண்ணுகிறது. மதரூஸ் நல்ல மதரூஸ் சூழ்நிலைக் கேற்றவாறு இசையை மக்களை மகிழ்விக்கிறார் எம். எஸ. விஸ்வநாதன்.

நடிப்பிற்கு முத்துராமனை முற்பகுதியில் நகைச்சுவை நடிகராக்கி பிற்பகுதியில் சிறையிலடைத்து கம்பி எண்ண வைத்து விட்டனர். சந்தர்ப்பம் தராமல கொடுத்த பாத்திரத்தைக் குறைவின்றிச் செய்து, தான் ஒரு குணச்சித்திர நடிகர் என்று நிரூபித்து விட்டார் முத்துராமன்,

நாகேஷ் இரட்டை வேடம் தாங்கி தூத்துக்குடி 'நடைமுறை மொழிகளை விளாசு விளாசு என்று. விளாசி தூத்துக்குடிக்கே நம்மை அழைத்துச் சென்று விட்டார். வழக்கம் போல் நகைச்சுவை அளித்தது வியப்பொன்றும் இல்லை.

மனோரமா நாகேசுக்கு இணையாகவும் கிராமத்துப் பெண்ணாகவும் நடித்து சபாஷ் பெறுகிறார்.

மற்றும் ஹரிகிருஷ்ணன் வக்கிலாகவும், வைத்தியராகவும், நடித்து நகைச்சுவை எழுப்புகிறார். ஓ. ஏ. கே. தேவரும் நீதி மன்றத்தில் தோன்றி மக்களின் மனதில் நின்று விடுகிறார். சுந்தரராசன் உள்ளபடியே பணக்காரராகி விட்டார். முத்துலட்சுமி பணக்கார ஆங்கிலம் பேசுகிறார். ராஜஸ்ரீக்கும், ஜெயபாரதிக்கும் கதையில் நடிப்பதற்கு வாய்ப்பளிக்கப் படவில்லை. கொடுத்ததைக் கும்மாளம் போட்டனர்.

நிமாய் கோஷின் ஒளிப்பதிவு. அ.ராமசாமியின் கலை, டி. எஸ். ரங்கசாமியின் ஒளிப்பதிவு பரவாயில்லை.

பயிற்சி: திரைக்கதை, வசனம், பயிற்சி அளித்த, K. பாலசந்தர் அவருக்கே உரிய பாணியில் முடித்திருக்கிறார். மருத்துவர் நாடி பார்ப்பது ஆண்களுக்கு வலது கை என்பதை மறந்து இடது கையில் நாடி பார்ப்பது, வீட்டின் பின்புற வழியாக வந்த இருவர்களைத் திருடர்கள் என்று எண்ணியும், இரு பெண்களை மாத்திரம் தனியாக விட்டு கட்டிப் போடச் சொல்வது, இது போன்ற சிறு சிறு குறைகள் தவிர்க்கப் பட்டிருக்கலாம். காதல் வெற்றிக்காக கல்லறை எழுப்புவதும், உயில், பட்டம், காவல் காரனுக்கு விடுமுறை கொடுத்து அனுப்புதல், அறையில் அலங்கோலம், ஓடக்காரன், முரடர்கள், பெண்கள், இவர்களையும், சந்தர்ப்பங்களையும் உண்டுபண்ணி இருப்பது பயிற்சியாளரின் திறமைக்கு எடுத்துக்காட்டு.

மொத்தத்தில்...குழந்தை வளர்ப்பு, விளையாட்டு வினை, பொழுது போக்கு இவைகளுக்காக ஒருமுறை குடும்பத்துடன் சென்று அய்யா பிலிம்சாரின் படத்தைப் பார்த்து "அனுபவி ராஜா அனுபவி".

—ஆ. ந.




# நற்றமிழர் போற்றும் செந்தமிழாம்.

(கி. இராசமாணிக்கம்)

அருள் நிறை மொழியென வழங்கி !
ஆண்டவன் உளமதில் விளங்கி !
இனிமை யென பாரினில் உறங்கி !
ஈவினை தன்னுள் அடக்கி !

உலகெலாம் பரந்து விளங்கி !
ஊனுடன் கலந்து உவகையால் வழங்கி !
எண்ணும் எழுத்தும் இரண்டறக் கலந்து !
ஏற்றமுறை வகையினில் சிறந்து !

ஐயந்திரிபின்றி வழங்கிடும் மொழியாம் !
ஒருவருக் கொருவர் துணையாகிடும் மொழியாம் !
ஓதும் வேதங்களில் நிறைந்திடும் மொழியாம் !
ஔடதமாக வாழ்வினில் நிறை மொழியாம் !

யாதென வினவின்? பாரினில் நாமே !
ஏதென கேட்பின்? தரணியில் நாமே !
விடைபகன்றிடின்! விண்ணவரும் நோக்கும் !
இடையுடை மகளிரென பாவலராலும்.

தடையின்றி உரைத்திடும் மொழியாம் !
கடை, இடை, முதலென முச்சங்கம்தான் !
பெற்று, பேணி, வளர்த்திட்ட செல்வநிறை
நற்றமிழர் போற்றும் செந்தமிழாம் !

# திரை உலகச் செய்திகள்

## பால் மனம்

நடராஜா புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் "பால் மனம்" படத்திற்கான படப்பிடிப்பு சமீபத்தில் சாரதாவில் படமாக்கப் பட்டது. இக்காட்சியில் கே. ஆர். விஜயா, ஜெய்சங்கர், சுந்தரராஜன் ஆகியோர்கள் நடிக்க சேது மாதவன் டைரக்ட் செய்தார்.

★

## ரகசிய போலீஸ் 115

பத்மினி பிக்சர்ஸ் தயாரிக்கும் ரகசியப் போலீஸ் படத்திற்கான படப்பிடிப்பு வெகு வேகத்துடன் வளர்கிறது. அண்மையில் எம். ஜி. ஆர், நம்பியார் சம்மந்தப்பட்ட காட்சிகள் பரணியில் படமாக்கப்பட்டது. தயாரிப்பாளர் பந்துலுவே டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்றிருக்கிறார்.



"பூவும்—பொட்டும்" படத்தில் முத்துராமனும் — ஜோதிலக்ஷ்மியும்.

## ஊட்டி வரை உறவு

கே. சி. பிலிம்ஸ் தயாரிக்கும் "ஊட்டி வரை உறவு" படத்திற்கான படப்பிடிப்பு அண்மையில் நடைபெற்றது. இப்படத்தில் பிரதம பாகத்தில் சிவாஜி கணேசனும், மற்றும் முத்துராமன், கே. ஆர். விஜயா, நாகேஷ் நடித்து வருகின்றனர். இப் படத்தை இரா.செழியன் தயாரிக்க ஸ்ரீதர் டைரக்ட் செய்கிறார்.

★

## கலாட்டா கல்யாணம்.

ராஜகுமார் பிக்சர்சாரின் "கலாட்டா கல்யாண"த்தை வேகமாக வளர்த்து வருகின்றனர். இபபடத்தில், சிவாஜி கணேசன், ஜெயலலிதா, முத்துராமன், நாகேஷ், சச்சு, சோ, முதலானோர் நடிக்க, திரைக்கதை வசனத்தை கோபு எழுதியுள்ளார். இசைப் பொறுப்பை விஸ்வநாதன் ஏற்க சி.வி.ராஜேந்திரன் டைரக்ட் செய்கிறார்.

★

## கற்பூரம்

சஷ்டி பிலிம்சாரின் கற்பூரம் வாகினியில் வேகமாக வளர்ந்து வருகிறது. இதில் ஏ.வி. எம்.ராஜன், புஷ்பலதா, மணிமாலா, பாலையா, பண்டரிபாய், சோ, முத்துலட்சுமி ஆகியோர் நடிக்கின்றனர் இப்படத்தின் டைரக்ஷன் பொறுப்பை சி.என்.சண்முகம் ஏற்றுள்ளார்.

★

## செல்வியின் செல்வன்

S. R. K. புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் 'செல்வியின் செல்வன்" வேகமாக வளருகிறது. ரவிச்சந்திரன், விஜயகுமாரி, முக்கிய பாத்திரமேற்று நடிக்க, கதை வசனத்தை விருதை இராமசாமி எழுத மோகன் டைரக்ட் செய்கிறார்.

ஆகஸ்டு வெளியீடு...

## பவானி

அண்ணு புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் "பவானி" இம்மாதம் 5ல் முதல் தென்னுடெங்கும வெளி வருகிறது இப்படத்தில் ஜெய்சங்கர், விஜயகுமாரி, அசோகன், நாகேஷ் முக்கிய பாத்திரமேற்று சிறப்புற நடித்துள்ளனர். கதை, வசனத்தை இயக்குநர் திலகம் K. S. கோபால கிருஷ்ணன் ஏற்றிருக்கிறுர்.

## "எதிரிகள் ஜாக்கிரதை"

மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிக்கும் "எதிரிகள் ஜாக்கிரதை" இம்மாதம் 11ல் முதல் தென்னுடெங்கும் வெற்றி முரசு கொட்ட வெளிவருகிறது- திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த இப்படத்தில் ரவிச்சந்திரன், விஜயலட்சுமி முக்கிய பாத்திரம் ஏற்று திறம்பட நடித்துள்ளனர். கதை, வசனத்தை, ஏ. எல். நாராயணன் எழுதியுள்ளார். பாடல்கள் கவிஞர். கண்ணதாசன் எழுத, வேதா இசை அமைத்திருக்கிறுர். டைரக்ஷன் ஆர். சுந்தரம் பி. இ ஏற்றிருக்கிறுர்.

## "பூவும் பொட்டும்"

வாசு பிலிம்சார் அளிக்கும் "பூவும் பொட்டும்" ஆகஸ்ட் இறுதியில் வெளிவரும் என எதிர் பார்க்கப்படுகிறது. இப்படத்தில் முத்துராமன், நாகேஷ், பானுமதி, பண்டரிபாய், ஏ. வி. எம். ராஜன், பாரதி, ஜோதிலட்சுமி முக்கிய பாகம் ஏற்று நடிக்கின்றனர். இப்படத்தின் டைரக்ஷன் பொறுப்பை தாதாமிராசி ஏற்றிருக்கிறுர்.



வாசு பிலிம்சாரின் "பூவும் பொட்டும்" படத்தில் நாகேஷ், ஏ. வி. எம். ராஜன், பண்டரிபாய்.

## திருமணம்

சென்னை, இராயபுரம், ரயில்வே காலனி நெ. D 179ம் எண்ணுள்ள மணமகன் இல்லத்தில் 14—6—67 காலை 7 மணியளவில், இராயபுரம், ரயில்வே காலனி K. டானியேல் குமாரன் D. கோவிந்தசாமிக்கும் செய்யூர் அடுத்த நெம்மலிகிராமம் பெருமாள் குமாரத்தி அஞ்சலையம்மாளுக்கும் திருமணம் சிறப்புற நடந்தது. தமிழ்த்திரைக்கு அன்பளிப்பாக அளித்த ரூபாய் 5-00 மகிழ்வுடன் பெற்றுக் கொண்டோம்.

## திருமணம்

சென்னை, இராயபுரம், காசிமேடு புனித தெரசம்மாள் தேவாலயத்தில் மயிலை A. சுவாமி நாதன் முதலியார் குமாரன் M. S. அந்தோனிதாஸுக்கும், சென்னை, காசித் தோட்டத்தில் வசிக்கும் M. ராஜீ முதலியார் குமாரத்தி R. லூர்துமேரிக்கும், சங்கைக்குரிய ஜான் கொட்டாராம் அவர்களால் 14—6—67 புதன் மாலை 5 மணிக்கு திருமணம் சிறப்புற நடத்தி வைக்கப்பட்டது.

தமிழ்த்திரை வளர்ச்சி நிதிக்காக அளித்த அன்பளிப்பு ரூபாய் 5-00 மகிழ்வுடன் பெற்றுக் கொண்டோம்.

## மகப்பேறு

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, 15- புது பங்களா வீதியில் வசிக்கும் ஏகாம்பரச் செட்டியார் குமாரன் பழனி செட்டியாரின் துணைவியார் மாலா அம்மையாருக்கு, 15—6—67 வியாழன் மாலை 4-55 மணிக்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையை தமிழ்த்திரை சார்பாக வாழ்த்துகிறோம். தமிழ்த்திரைக்கு அளித்த அன்பளிப்பு ரூ. 5-00 மகிழ்வுடன் பெற்றுக் கொண்டோம்.

## மகப்பேறு

எனது வாழ்க்கைத் துணைவி சிவபூஷ்ணம் அம்மையார் 29—7—67 சனிக்கிழமை காலை 8-மணிக்கு "ஆண்" குழந்தை பிறந்தது என்பதை நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வணக்கம்.

அன்பன்,

சென்னை-2.
1—8—67.

N. R. சபாபதி.
(கம்போஸிட்டர்)

ஏஜெண்டுகள் தேவை!

தொலைபேசி எண். 441680

அதிக விளைச்சல் கொடுக்கக்கூடிய

# “கோபுரம்” மார்க்

## பர்டிலைசர்கள்

(சென்னை சர்க்காரால் அங்கீகாரம் பெற்றது)

★ சல்பேட் ★ சூபர் பாஸ்பேட் ★ மிக்சர்

வகைகளை முன்பணம் கொடுத்து வாங்கி, விற்க
ஏஜெண்டுகள் தேவை

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :

**சவுத் இந்தியா கெமிகல்ஸ்**

2-F, V. O. C. காலனி, கோடம்பாக்கம், சென்னை-24.
(ராம் தியேட்டர் பின்புறம்)

தபால் எண். 2362

## Service is our Motto

We pledge to offer hygenic and delicious food and drinks to suit all tastes and served with all courtesy.

We look forward to your kind patronage.

Well ventilated and furnished airy rooms will continue to be available in our Lodge as usual.

## Udipi Hotel & Lodge

(Next Street to Casino Theatre)
13, Meeran Sahib Street,
Mount Road, : : Madras-2.

*Service is our motto*

## R. Sundaram & Co.

Leather Merchants

and Commission Agents

3, NABIKHAN SUBEDHAR ST.

PERIAMET MADRAS-3.

ஆசிரியர், வெளியிடுபவர்: ஆ. நடராசன், 14, அருணாசல நாய்க்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. அச்சிடுபவர்: D T. அரசு, அரசு பிரிண்டர்ஸ், சென்னை-2,

## என் அருமை வாலிப நண்பர்களே! பெரியோர்களே!!

இப்பவும் தங்கள் திரேகம் மிகவும் இளைத்து, நாடி நரம்புகள் தளர்ச்சியடைந்து, இல்லற வாழ்க்கையில் சக்தி இழந்து, வயோதிகரைப் போல் காணப்படுகிறீர்களா? இதற்கு காரணம் என்ன?



Dr. S.R. சிவராஜ்

நீங்கள் வாலிபத்திலே தெரியாமல் செய்கிற தவறுதல்களினால், இப்போது உங்கள் உடல் உஷ்ண மிகுதியால் எரிச்சல், முகம் ஒட்டிப் போதல், கைகால் அசதி, கெட்ட கனவு மூலம் சக்தி வெளியாதல், சிறுநீரில் சக்தி வெளியாதல், தளர்ச்சியடைதல், தலைவலி, வயிற்று வலி, மலச்சிக்கல், இடுப்பு, முதுகு நடுதண்டில் வலி, கைகால் மூட்டுகளில் வலி, பயம், வெட்கம் இவைகள் ஏற்பட்டு இவைகளை பிறரிடமோ, பெற்றோர்களிடமோ சொல்ல வெட்கப்பட்டுக்கொண்டு மணவாழ்க்கைக்கு முன் கஷ்டப்படுகிறார்கள் ஒரு சிலர். மணமானபின் இல்லற வாழ்க்கையில் இன்பமுற முடியாமல் கஷ்டப் படுகிறார்கள் மற்றும் பலர்.

இம்மாதிரி உடல் நலம் கெட்டவர்களும், இதற்காகப் பலரிடம் வைத்தியம் செய்து ஏமாற்றப் பட்டவர்களும் இனி கவலைப்பட வேண்டாம். இப்படிப்பட்ட வியாதிக்கு ஒரு நாளிலோ ஒன்றிரண்டு மாதங்களிலோ, எந்த மருந்தினாலும் குணம் பெற முடியாது. சில மாதங்கள் தொடர்ந்து மருந்துகளை உபயோகித்து வந்தால் தான் படிப்படியாக உஷ்ணம் குறைந்து, இரத்த விர்த்தியாகி சக்தி திடப்பட்டு நாடி நரம்புகளுக்கு வலுவு ஏற்படுத்தி, புதிய சக்தியும், புத்துணர்ச்சியும் பெற்று வரலாம்.

## ஒரு மாதம் உபயோகிக்கும் மருந்துகள்

| ஸ்பெஷல் செட் | 1 வது செட் | 2 வது செட் | போஸ்டேஜ் |
|---|---|---|---|
| ரூ. 55/- | ரூ. 40/- | ரூ. 30/- | இலவசம் |

குறிப்பு:– மேலே சொன்ன காரணங்களை நன்ருகப்படித்துப் பார்த்து, மனதில் திருப்தி கொண்டவர்கள் மட்டும் என்னிடம் சில மாதங்கள் சிகிச்சை பெற்று, மீண்டும் வாழ்க்கையில் வெற்றி பெற விரும்புபவர்களை மட்டும் அழைக்கிறேன். தொடர்பு கொள்க.

### கீழ்க்கண்ட இடங்களில் சந்திக்கலாம்

**சென்னை** தேதி 1. 2. 3.
ராமச்சந்திரா லாட்ஜ்

**விழுப்புரம்** தேதி 4.
வாசவி விஹார்

**கடலூர் (N.T.)** தேதி 5.
ஹோட்டல் பிருந்தாவனம்

**சிதம்பரம்** தேதி 6.
ஜெயராம் லாட்ஜ்

**மாயவரம்** தேதி 7
பாத்திமா கனி லாட்ஜ்

**கும்பகோணம்** தேதி 8.
தாஜ்மஹால் லாட்ஜ்

**தஞ்சாவூர்** தேதி 9
ராஜா சத்திரம்

**திருச்சி** தேதி 10. 11.
அசோக் பவன் ஹோட்டல்

**கோவை** தேதி 12. 13
சீதா ராம விலாஸ்

**பொள்ளாச்சி** தேதி 14.
மாடர்ன் லாட்ஜ்

**திருப்பூர்** தேதி 15.
முனிசிபல் முசாபரி பங்களா

**ஈரோடு** தேதி 16.
நவ பவனம் லாட்ஜ்

**சேலம்** தேதி 17. 18. 19.
சிவதாபுரம் (ஹெட் ஆபீஸ்)

**திண்டுக்கல்** தேதி 20.
ஆரிய பவன் போர்டிங் & லாட்ஜிங்

**மதுரை** தேதி 21. 22
மணிஸ் கேப்

**திருநெல்வேலி** தேதி 23. 24.
நெல்லை லாட்ஜ்

**சேலம்** தேதி 26 முதல் 30 முடிய
சிவதாபுரம் (ஹெட் ஆபீஸ்)

## சிவராஜ சித்த வைத்தியசாலை
சித்தர் கோவில் ரோடு, சிவதாபுரம், S.O. சேலம்.

67


தந்தி "பெர்டிலைசர்" போன் : 441731

ஏஜெண்டுகள் தேவை!

M. L. C.

டைமன் பிராண்டு

N. P. K.

சத்துள்ள கலப்பு உரங்களையே உபயோகியுங்கள்!

குறைந்த விலை! அதிக மகசூல் தரும் !!

தவிர எங்களிடம்,

★ சூப்பர் பாஸ்பேட்,

★ P. H. C. எண்டரின்,

முதலிய பூச்சி மருந்துகளும் கிடைக்கும்.

முன்பணம் கட்டி எடுத்து விற்கும் ஏஜெண்டுகள் தேவை.

விபரங்களுக்கு தயாரிப்பவர்:—

**மகாலக்ஷ்மி டிரேடிங் கம்பெனி,**

15, தியாகராய கிராமணி தெரு, தி. நகர், சென்னை-17.